10

பிச்சம்மா

பிச்சம்மா குந்தி உட்கார்ந்துகொண்டு அரிசி தாத்திக்கொண்டிருந்தாள்.

குச்சி உடம்பில் அழுக்கேறின பாக்குக் கலர் நூல்புடவை. ரவிக்கை இல்லாத மார்பில் புரண்ட மஞ்சள் கயிறு. காதில் ஒரு காலத்தில் தோடு போட்டிருந்ததற்கு அடையாளமாய் பெரிய துவாரம்—எண்ணெயைக் கண்டு வருஷங்களாகி விட்டதால் திரித்திரியாய் செம்பட்டை நிறத்தில் தொங்கிக்கொண்டிருந்த தலைமுடி—பாதங்களில் வெள்ளை உலோக மெட்டி. கைவிரல் ஒன்றில் பிளாஸ்டிக் மோதிரம்—

வாயில் அடக்கியிருந்த வெத்தலை, புகையிலைக் கலவையை சற்றைக்கொரு தரம் மென்றவண்ணம் தான் உண்டு, தன் வேலை உண்டு என்று அவள் காரியத்திலேயே கண்ணாக இருந்தாள்.

நேற்று நெல் அரைக்க நான் மிஷினுக்குப் போனபோது தான் பிச்சம்மாவை முதன் முதலில் பார்த்தேன்—அதற்கு முன் பரிச்சயம் கிடையாது.

நெல் மூட்டையை இயந்திரத்தில் கொட்டிவிட்டு அது தவிடு ஒரு பக்கமும் அரிசி ஒரு பக்கமும் கொட்டுவதைக் கண்காணித்த வாறு நின்றிருந்த சமயத்தில் அவளைப் பார்த்தேன்.

சற்றுத் தள்ளியிருந்த கொட்டகையில் அமர்ந்து இயந்திரத்திலிருந்து விழும் தவிடை அவள் புடைத்துக்கொண்டிருந்தாள்.

தலைமுடி, முகம், உடம்பு எல்லாம் ஒரே தவிடு மயம்—

இந்தப் பக்கம் அந்தப் பக்கம் என்று திரும்பி, கதை பேசாமல் அவள் காரியத்தில் மூழ்கி இருந்தாள்.

சின்னப் பையன்கள் இரண்டு—ஒன்றுக்கு மூன்று வயசிருக்கும்; இன்னொன்றுக்கு அதைவிட ஓரிரு வயசு கூட இருக்கும்; தவிடில் புரண்டு ஓடியாடிக்கொண்டிருந்தன. நடு நடுவில் இவள் புடைத்து வைத்திருக்கும் நொய்யிலிருந்து ஒரு பிடி அள்ளி இரண்டும் வாயில் போட்டுக் கொள்ளும்; பிறகு மறுபடியும் விளையாடத் தொடங்கிவிடும்.

இரண்டு பிள்ளைகளும் முழு நிர்வாணமாய், மூக்கில் சளி வழிய உடம்பெல்லாம் புழுதி பூசினபடி இருந்தன.

எனக்கு அவளையும் அந்தக் குழந்தைகளையும் பார்க்கையில் பாவமாக இருந்தது—

"என்னத்துக்காக இப்படித் தவிட்டுப் புழுதியில் உட்கார்ந் திருக்கா? அந்தப் பசங்க யாரு?"—நான் மில் ஆளைக் கேட்டேன்.

"எங்களுக்கு அரைகூலி கொடுக்கறதுக்கு பதிலா நெல் அரைச்சு விழற தவிட்டைக் கொடுக்கறீங்க இல்லே? அதுல கொஞ்சம் நொய் கலந்திருக்கும். இந்தப் பொம்பளை அத்தை புடைச்சிப் பிரிச்சி எடுத்துக்கிட்டு தவிட்டை மாத்திரம் எங்களுக்குக் கொடுத்திடும்... அதுக்கு பர்த்தியா காலைலே அன்னாடம் இந்த மில்லைப் பெருக்கி, அலம்பி சுத்தம் பண்ணும்..."

"இவ இங்கே புதிசா, என்ன? போன தடவை நான் வந்த போது பார்க்கலியே?"

"ஆமாங்க...இது வந்து பத்து நாள்தான் ஆவுது, இதுக்கு பானாம்பட்டு சொந்த ஊராம். புருஷன்காரன் வகையில்லே—குளந்தைங்க பசியிலே அளுவறது தாங்காம இந்த வேலைக்கு வந்திருக்கு..." அந்த ஆள் மேற்கொண்டு என்னோடு வம்பளக்க நேரமில்லாமல் அந்தப் பக்கம் போய்விட்டான்.

அப்போதுதான் அந்தப் பெண்மணி எழுந்து என்னருகில் வந்தாள்—

"அரிசி அரைச்சு எடுத்திட்டுப் போறிங்களேயம்மா...தாத்தி, நோம்பத் தாவலை?—வூடு எங்கேனு சொன்னிங்கன்னா நா வந்து செஞ்சி கொடுக்கட்டுமா?"

எனக்கு வழக்கமாக அரிசி சுத்தம் செய்யும் வேலைக்காரி ஊரில் இல்லையே—புதிதாக யாரைப் பிடிப்பது என்று நான் பட்டுக்கொண்டிருந்த கவலை தீர்ந்தது என்ற சந்தோஷத்தில், என் வீட்டுக்கு வரும் வழியைச் சொல்லிவிட்டு வந்தேன்.

இன்று காலை வந்துவிட்டாள்.

நேற்று பார்த்த இரண்டு பிள்ளைகளும் பின்னோடு வந்திருந்தன—

அரிசியை பின்முற்றத்தில் கொண்டு தாத்தும் நாழிகையில் அவளைப் பற்றிய விவரங்களைப் புரிந்துகொண்டேன்.

பிறந்த நாளிலிருந்து பிச்சம்மா சுகம் என்றால் என்ன என்பதையே அறியாதவளாம். தாய் இறந்து போனபோது மூத்த பெண்ணான இவள்தான் குடும்பப் பொறுப்பு பூராவும் ஏற்றுக் கொள்ள வேண்டி வந்ததாம். பதினாறாவது வயதில் சொந்தத்தில் இவளைச் செலவில்லாமல் திருமணம் செய்து வைத்தார்கள்! கல்யாணமான வருஷமே இவளுக்குக் கையில் குழந்தை. அடுக்கடுக்காய் ஐந்து குழந்தைகளுக்கு இவளைத் தாயாக்கிவிட்டு இவள் கணவன் வைப்பாட்டி ஒருத்தியைக் கூட்டிக்கொண்டு, ஒரு வருஷ காலமாய் இவளைப் படாதபாடு படுத்துகிறானாம். சீ—என்ன வாழ்க்கை, என்ன புருஷன் என்ற சலிப்புத் தோன்ற பிள்ளைகளைக் கூட்டிக்கொண்டு இந்த ஊருக்கு வந்து விட்டாளாம்—

"கடவுள் என் தலையிலே என்னாத்தே எழுதியிருக்கானோ அத்தை நான் அனுபவிச்சுத்தானே ஆவோணும்? 'புருஷன் புருஷன்'னு சொல்லிக்கிட்டு அவனோட இருக்க ஆசைப்பட்டு அந்த சின்ன தேவடியாளுகிட்டே நான் ஏன் ரோதனைப் பட ணும்?...மரம் வச்சவன் தண்ணி ஊத்தரான்னு கௌம்பிட்டேன்."

சலிப்பு முகத்தில் தாண்டவமாடப் பேசும் அவளைப் பார்த்தேன். வயசு முப்பதுக்குள்தான் இருக்கும். பாவம், ரவிக்கை அணியாமல், பொட்டு வைக்காமல், தலையைக்கூட சீவாமல், பிச்சைக்காரிபோல நடைப்பிணமாய் இருக்கும் அளவுக்கு இவளுக்கு வாழ்க்கை வெறுத்து விட்டதா?

எதற்காக இப்படிக் கிழவி வேஷம் போடுகிறாள்? இல்லாமை இருக்கலாம், அதற்காக சுத்தமாக இருக்கக் கூடாதா என்ன? முகம் கழுவ காசு வேணுமா? இல்லை முன்நெற்றி மயிரைக் கோதிக் கொள்ள கஷ்டமா? அவளிடம் கேட்டுவிட்டேன்.

"ஆங்...நல்லா கேட்டீங்கம்மா...இந்த வயசுக்கு மேல எனக்கு என்னாத்துக்கு ரவிக்கையும் பொட்டும்? பொண்ணுக்கு வயசாகுது...பெரியவளா ஆயிட்டா இதுக்கு மேலே நான்

சிங்காரிச்சுக்கிட்டு நின்னா எப்படி? அவோ சின்ன வயசுக்காரி—சிங்காரிச்சுக்கறது நாயம்—எனக்கு இன்னா?...நா பொட்டு இட்டுகினு பூ வைச்சிக்கினு மினுக்கினா என்னப் பாத்து ஒரு ஆளு இளிப்பான்...நா மனசு புத்தி கலங்கிப் போயி எதனாச்சும் தப்புத் தண்டா நடந்துடிச்சின்னா?...என்னாத்துக்கு வம்பு..."

ஓ! விஷயம் அதுவா?

கையாலாகாத புருஷனுக்கு துரோகம் நினைக்காத பெண்ணாக இருக்கும் பிச்சம்மாளை நினைக்கையில் எனக்கு ஆச்சரியம் எழுந்தது.

தாத்தி வைத்திருந்த அரிசிக் குவியலிலிருந்து சில பிடிகள் எடுத்துத் தின்று, குழாய் தண்ணீரைக் குடித்து விளையாடின பையன்களுக்கு அலுப்பாயிருந்தது போலும்! வேப்ப மரத்தடியில் படுத்த இரண்டும் சற்றைக்கெல்லாம் நன்றாய் உறங்கி விட்டன—சுளீரென்று வெயில் மேனியை தகிக்க மண் தரையில் புரண்டு அச்சிறுவர்கள் தூங்கினதைப் பார்க்கையில் எனக்கு வேதனை எழுந்தது.

"வீட்டு வேலை ஒண்ணும் கிடைக்கலையா பிச்சம்மா? அரிசி மில் தவிட்டு தூசிலே சதா பிள்ளைங்களோட இருந்தால் சரிப்படுமா? இப்படி பச்சரிசியை வெறும்மனே தின்னா உடம்புக்கு ஆகுமா?" என்றேன்.

பிள்ளைகளைத் திரும்பிப் பார்த்து, அவர்கள் மேல் மொய்த்த ஈக்களை ஓட்டினாள் பிச்சம்மா—

"சின்னச் சின்ன பசங்களை வைச்சுகினு வூட்டு வேலைக்கு எப்படிம்மா போக முடியும்? மூத்த மவ வூட்டிலே கஞ்சி வைச்சு கைக்குளந்தையை பார்த்துக்குவா. ரெண்டாம் மவனுக்கு பக்க வாதங்கண்டு படுக்கையாக்கிறான். இதுங்க ரெண்டையும் வூட்லே வுட்டுட்டு வந்தா மவளால சமாளிக்க முடியாது...இதுங்களை இட்டுகினு போய் எந்த வூட்லே வேலை பண்ண முடியும்? நெல் மில்லுலே தவிடு பொடைக்கிற நாழிலே இதுங்க அங்கேயே அரிசி தின்னு ஒரு வேளை வயித்தையும் ரொப்பிக்கிதுங்க...பசி, பசின்னு என்னெ புடுங்காதுங்க...அதா பாருங்க...நாலு தபா அரிசி தின்னுட்சு, தண்ணி குடிச்சிட்டு தூங்கிடுச்சுங்க...தவிட்டு தூசி பார்த்தா நடக்குமாம்மா?"

அவள் பேசப் பேச எனக்கு அழுகை வந்துவிடும் போல இருந்தது. ஒரு நாளைக்கு அரிசிச் சோறு நன்றாக வேகாவிட்டால்,

வயிறு அஜீரணங்கண்டு, வயிற்றுப் போக்கு உண்டாகிறது. இந்தச் சின்ன குழந்தைகள் பச்சை அரிசியை அன்றாடம் தின்று ஒரு வேளைப் பசியை ஆற்றிக் கொள்கின்றனவாமே!

பாவம்—பிச்சம்மாளின் கதை ரொம்பக் கஷ்டமானதுதான்.

பகல் பன்னிரண்டு மணிக்குள் பிச்சம்மா அரிசியை சுத்தம் பண்ணிவிட்டாள்—

கல்லும் தவிடும் நிறைந்த நொய், நல்ல நொய், அரிசி என்று தனித்தனியாகப் பிரித்துக் கொட்டியிருந்தாள்.

"தண்ணிலே ஊறப்போட்டு களைஞ்சா தவிடு போயிடும்—பொறவு நல்ல தண்ணிலே போட்டு அரிச்சா நொய் தனியா வந்துடும்—ஒரு வேளை கஞ்சிக்காவுமே..." என்றாள்.

அதில் மொத்தம் இருந்ததே, கல், தவிடு, நொய் எல்லாம் சேர்ந்து இரண்டு ஆழாக்குதான். இதில் கல் தவிடு போனால் பாக்கி என்ன இருக்கும்? அரை ஆழாக்கு நொய் கண்டால் அதிகம்—அதற்கு ஒரு நாழிகை மெனக்கிடப் போகிறாளா?

அவளுடைய ஏழ்மை மனசைக் குத்தியது.

பாவம்—

"எனக்குக் கூலி கொடுங்கம்மா...நான் கெளம்பறேன், மவ காத்திட்டிருப்பா."

நான் உள்ளே போனேன். ஒரு ரூபாயைக் கொண்டு வந்து பிச்சம்மாளிடம் கொடுத்தேன்.

"நொய் கிடையாதுங்களாம்மா? ஏதோ உங்க பேரைச் சொல்லி குயந்தைங்களுக்கு ஒரு வேளை கஞ்சி ஊத்துவேன்..."

"அரை மூட்டை அரிசி தாத்த ஒரு ரூபாய் கூலிதான் கொடுக்கறது வழக்கம்...நொய் எங்களுக்கு வேணுமே...உடைச்சி வச்சிண்டா உப்புமா, அது, இது பண்ண உதவுமே! சரி, சரி, வாயைத் திறந்து கேக்கறே...கொடுக்கறேன்..." அந்தப் பணத்தை மறுபடி வாங்கிக்கொண்டேன்.

உள்ளே போய் அரைப்படி நொய்யும், எட்டணா காசும் கொண்டு வந்து கொடுத்தேன்.

"என்னம்மா? எட்டணா கொடுக்கறீங்க—மொதல்லே ஒரு ரூபா கொடுத்தீங்களே" பிச்சம்மா குரலில் ஏமாற்றம் தெரிந்தது.

"ஒரு படி நொய் ரெண்டு ரூபா விக்கறது...உனக்கு நா அரைப்படி கொடுத்திருக்கேன். அதுக்கே ஒரு ரூபா ஆறது...நா போனாப் போறதுனு மேல்கொண்டு எட்டணா கொடுத் திருக்கேன்—உனக்குத் திருப்தி இல்லையே! வழக்கமா வர வேலைக் காரி நான் கொடுத்ததை வாயை மூடிண்டு வாங்கிண்டு போவா...ஐயோ பாவம்னு உன்னை தாத்தச் சொன்னா உனக்குத் திருப்தி இல்லையே!" நான் கறாராய் பேசிவிட்டு உள்ளே போய் விட்டேன்.

பிச்சம்மாள் வாடின முகத்துடன் பிள்ளைகளை எழுப்பிக் கொண்டு, நொய்யுடன் புறப்படுகிறாள். அவள் கதையைக் கேட்டு நான் உண்மையாகப் பரிதாபப்பட்டு வருந்துவதைப் பார்த்து நான் நிறையக் கூலி கொடுப்பேன் என்று எதிர்பார்த்தது அவள் தவறு தானே?—பரிதாபம் வேறு; தர்மம் வேறு. மனசார எவ்வளவு வேண்டுமானாலும் இரக்கப்பட்டு விடலாம்—அதற்காக அந்த அளவுக்கு தானம் செய்ய எத்தனை பேர் ரெடி?

என்ன, நான் சொல்லுவது சரிதானே?

– கண்ணதாசன், 1976